**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.842/2022**

**Deposition of PW-3/LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பிரபாகரன் | **Age** | : | 31/2026 |
| **Father's Name** | : | திரு. தெய்வம் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | வியாபாரம் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02/07/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மனு எண் 394/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2) ஆண்டிச்சாமி என்பவருடன் நான் எனது வீட்டில் இருந்து அவருடைய பைக்கில் சென்றேன். ஆண்டிச்சாமி என்னை அழைத்துக் கொண்டு சென்றார் என்றால் சரிதான். அவருடைய பைக் suzuki பைக் ஆகும். என்ன கிழமையில் சம்பவம் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ சமயத்தில் நான் டிரைவராக வேலை பார்த்து வந்தேன். சம்பவ இடத்திற்கு அருகில் டிஎம்பி ஏடிஎம் உள்ளது என்றால் அங்கு சிசிடிவி கேமரா உள்ளது என்றால் உள்ளது.

3) சம்பவ இடத்திற்கு அருகில் சுமோ வாகனம் நிறுத்தப்பட்ட ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான் அங்கு எப்போதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். ஜெகநாதன் ஓட்டி வந்த காரின் நிறம் குறித்து போலீசார் விசாரித்தபோதும் நான்

எனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவர் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

4) நிஷாந்த் என்பவர் தலைக்கவசம் அணிந்து இருந்தாரா என்றால் ஆமாம் அணிந்திருந்தார். நிஷாந்த் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. இருசக்கர வாகனத்தில் பின்புறமாக பார்ப்பதற்கு கண்ணாடி இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. ஜெகநாதன் நிஷாந்த் ஓட்டி சென்ற வாகனத்தின் பின்புறமாகதான் இடித்தார். காரின் இடதுபுறம் இடித்ததா அல்லது வலதுபுறம் இடித்ததா என்றால் நான் அதை கவனிக்கவில்லை.

5) நிஷாந்த் இருசக்கர வாகனத்தை ஏடிஎம் பக்கமாக திருப்பும்போது சைகை செய்யாமல் திரும்பியதால்தான் விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான். நிஷாந்த் இன்டிகேட்டர் போடாமல்தான் திரும்பினார் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் அடிபட்டவர்கள் கேட்டுக் கொண்டதற்காக அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.02 19:12:51 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.